## சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள்

நமது பள்ளியும், இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் இணைந்து தென் மாவட்டத்தில் உள்ள சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி வகுப்புகளை நடத்தினோம். இப்பயிற்சி வகுப்பில் உளவியல் மற்றும் நடத்தை சார்ந்த பிரச்சினைகளை கையாளும் முறைகள் பற்றி மதுரை ராஜாஜி மருத்துவமனையின் உளவியல் அறிஞர் திரு.சுரேஷ்குமார் விளக்கப்படுத்துகிறார்.


ஆகஸ்டு 8. 2016

## உலக தாத்தா பாட்டி தினம்


செப்டம்பர் 10. 2016

உலக தாத்தா பாட்டி தினத்தன்று நமது பள்ளியும், மதுரை கல்யாணி அசோஸியேட்சும் இணைந்து சிறப்பு குழந்தைகளின் தாத்தா, பாட்டிகளை கௌரவிக்கும் வகையில் சிறப்பான நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக Er.A.மதுரம், மதுரை மாநகராட்சி நகர பொறியாளர் Er.K.இளங்கோ பாக்யராஜ், மேக்ஸ் பிராப்பர்ட்டீஸ் நிர்வாக இயக்குனர் மற்றும் திரு.L.முரளி கிருஷ்ணன் நிர்வாக இயக்குனர், கல்யாணி அசோஸியேட்ஸ் அவர்களும் வந்திருந்த தாத்தா பாட்டிகளுக்கு பரிசளித்து வாழ்த்தி கௌரவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் பொறியியல் கல்லூரி மாணவர்கள் தாத்தா, பாட்டிகளுக்கு கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

## தொழிற்சாலை பார்வையிடுதல்



நாம் அன்றாட வாழ்க்கையில் சமையலுக்கு பயன்படுத்தும் சமையல் எண்ணெய் எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மதுரை ஞானஒலிவபுரத்தில் செயல்பட்டுவரும் பிரபலமான சாஸ்தா எண்ணெய் தயாரிக்கும் நிறுவனத்தை பார்வையிடுகின்றார்கள். இது தவிர பிஸ்கட் மற்றும் ஐஸ்கிரீம் தயாரிக்கும் கம்பெனிகளையும் மாணவர்கள் பார்வையிட்டார்கள்.



## மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து சிறப்பு பள்ளி பணியாளர்களுக்கான பாராட்டுவிழா

நமது பள்ளியும், பெஸ்ட் அறக்கட்டளையும் இணைந்து மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கான பாராட்டுவிழா நிகழ்ச்சியை முதல் முறையாக நடத்தியது. இதில் 14 சிறப்பு பள்ளிகளைச் சார்ந்த 155 பணியாளர்கள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் சென்னை ஆல்பா & ஒமெகா அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு.E.பீட்டர் பின்கெய்ரோ, மதுரை சிறப்பு தாசில்தார் திருமதி.G.புஷ்பாதேவி அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்(ஓய்வு)திரு.M.ஜெயசீலன், ஸ்ரீகார்த்திகா கன்ஸ்டிரக்ஸன் பொறியாளர் திரு.V.ஆறுமுகம் மற்றும் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர்.V.S.விஜயகுமார் அவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு அனைத்துப் பணியார்களுக்கும் பாராட்டுச் சான்றிதழும், பரிசும் வழங்கி கௌரவித்தார்கள்.


தொடர்பு முகவரி

**பெத்சான் சிறப்பு பள்ளி**

( மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )

தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது

3 / 369 - B, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.

Phone : 0452 - 2 660 770 ; 98949 28666 ; 9894476662

E-mail : bethshanschool@gmail.com | F:www.facebook/bethshanschool | Website : www.bethshanschool.org


BETHSHAN
SPECIAL SCHOOL

# நிகழ்வுகள்

**2016**
ஆண்டு அறிக்கை

பேரன்புடையீர்,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்கள்.

பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 20 ஆண்டுகளாக மதுரை, சிக்கந்தர் சாவடியில் மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக செயல்பட்டுவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். எமது பள்ளியானது தமிழக அரசின் அங்கீகாரமும் மத்திய அரசின் பதிவும் பெற்றுள்ளது. கடந்த வருடத்தில் பள்ளியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை தொகுத்து ஆண்டறிக்கையாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு வருடமும் பள்ளி மாணவர்களின் நலனுக்காக நீங்கள் தாராளமாக தேவை கருதி கொடுத்து உதவி செய்து வருகின்றீர்கள். இப்படிப்பட்ட நல்ல எண்ணங்களை கடவுள் உங்களுக்கு கொடுத்திருக்கின்றார். ஆகவே கடவுளுக்கும், உங்களுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த சமூக பணியில் உங்களை எங்களோடு இணைத்துக் கொண்டமையால் கடவுள் நிச்சயம் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் மெய்யான ஆசீர்வாதங்களைத் தந்து ஆசிர்வதிப்பார். நீங்கள் காண்பித்து வரும் அன்பையும், உதவிகளையும் இனிவரும் நாட்களிலும் தொடர்ந்து செய்திட உங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த சிறப்புக் குழந்தைகளோடு உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ள பள்ளிக்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

நன்றி.

சமூக பணியில்,

R.ரவிக்குமார்
முதல்வர்



மனவளர்ச்சி குறைந்தோரில் சிறந்த பணியாளர்க்கான மாநில விருதினை நமது பள்ளியில் சிறப்பு கல்வி முடித்து, தற்போது மதுரை, கல்யாணி ஹோண்டா இருசக்கர வாகன சேவைப்பிரிவில் பணிபுரிந்து வரும் சிறப்பு பணியாளர் திரு. B.நாகவேல் பெற்றுள்ளார். உடன் சமூகநலத்துறை அமைச்சர், செயலாளர், ஆணையர், பள்ளியின் முதல்வர் ரவிக்குமார் மற்றும் நாகவேலின் பெற்றோர்கள்.

புத்தாண்டு நல்வாழ்த்துகள்

**2017**

ஏழைக்கு இரங்குகிறவன்
கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்.
அவன் கொடுத்ததை அவர்
திரும்பக் கொடுப்பார்.
– பைபிள் –

# விளையாட்டுச் செய்திகள்

இவ்வருடத்தில் மட்டும் நமது பள்ளி மாணவர்கள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு எண்ணற்ற வெற்றிகளை பெற்றுள்ளனர்.

## கூடைப்பந்து :

மாநில அளவிலான கூடைப்பந்து போட்டிகளை மதுரையில் நமது பள்ளி நடத்தியது. இதில் 12 மாவட்டங்களிலிருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் அணி பங்கேற்றது. சென்னையில், தேசிய அளவில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டிகளில் நமது பள்ளி மாணவர்கள் 5 பேர் ஆண்கள் பிரிவில் தமிழக அணியில் பங்கேற்றனர். இதில் தமிழகத்தின் ஆண்கள் அணி தங்கப் பதக்கமும், பெண்கள் அணி வெள்ளிப் பதக்கமும் வென்றது. நமது பள்ளி மாணவர்களான R.நவீன்குமார் மற்றும் D.மனோஜ்குமார் ஆகிய இருவரும் 2019 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சர்வதேச கூடைப்பந்து போட்டிகளில் இந்திய அணியில் விளையாடுவதற்கு தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

## போச்சி போட்டி :

மாநில அளவில் சென்னையில் நடைபெற்ற போச்சி போட்டியில் S.அருண் - தங்கப் பதக்கமும் மற்றும் Y.யுவன்சங்கர் - வெண்கலப் பதக்கமும் பெற்றார்கள். பீகாரில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் மாதேஸ் - தங்கப்பதக்கம் வென்றார்.

## இறகுபந்து போட்டி :

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான தனிநபர் பங்கேற்கும் இறகுபந்து போட்டியில் E.திவ்யபாரதி - வெள்ளிப்பதக்கம் வென்றார்.

## மெண்பந்து போட்டி :

ஒரிசா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான மெண்பந்து போட்டியில் தமிழக அணியின் சார்பில் நமது பள்ளி மாணவர்கள் 12 பேர் கலந்து கொண்டு வெண்கலப்பதக்கம் வென்றார்கள்.

## தடகளப் போட்டி :

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் S.சந்தியாதேவி, E.திவ்யபாரதி மற்றும் S.ஸ்ரீதேவி ஆகியோர் கலந்து கொண்டு 4 வெள்ளிப்பதக்கமும், 1வெண்கலப் பதக்கமும் வென்றார்கள்.




மாநில அளவிலான கூடைப்பந்து போட்டிகளை மதுரை மாவட்ட குற்றவியல் நீதிபதி.C.M.சரவணன் அவர்கள் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள்.



தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டியில் தங்கம் வென்ற நமது பள்ளி மாணவர்களை மதுரை மாவட்ட ஆட்சியர்திரு.கொ.வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்தியபோது.

# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம்




நமது பள்ளியும், இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் இணைந்து பெண்களுக்கு ஏற்படக்கூடிய மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. இந்த விழிப்புணர்வு வகுப்புகளை சி.எஸ்.ஐ.ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரியின் துணை முதல்வர் திருமதி.மெர்லின் ஜெயபால் அவர்கள் விளக்கினார்கள்.

## குடியரசு தினவிழா

ஜனவரி 26. 2016



நமது பள்ளியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவின்போது திரு.கணேசன் அவர்கள் உரிமையாளர், கீஸ்டுகானம், மதுரை தேசிய கொடியை ஏற்றி, வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சியின் நிறைவில் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

## சுதந்திர தினவிழா

ஆகஸ்டு 15. 2016



நமது பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவின்போது திரு.குமார் அவர்கள் மதுரா கோட்ஸ் - தொழிற் சங்கத் தலைவர் தேசிய கொடியை ஏற்றி, வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சியின் நிறைவில் மாணவர்களுக்கு அவரது குடும்பத்தினர் இனிப்புகள் வழங்கினார்கள்.



அக்டோபர் 10 ஆம் தேதியன்று நமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டலும் இணைந்து மாவட்ட அளவிலான போட்டிகளை உலக மனநல நாளன்று நடத்தியது. இப்போட்டிகளில் மதுரை மாவட்டத்திலுள்ள 13 சிறப்பு பள்ளிகளை சார்ந்த 115 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வருட கருப்பொருளை செல்வி.விசித்திரா ராஜாசிங் அவர்கள் (நிர்வாக இயக்குனர் - பெல் ஹோட்டல் ) வெளியிட்டார்கள். அதன் முதல் பிரதியை திரு.J.ரிஷ்வந்த் அவர்கள் (நிர்வாக இயக்குனர் - ஜே.ஸி.ரெஸிடென்ஸி) பெற்றுக் கொண்டார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் Er.V.ஆறுமுகம், Rtn.A.காளிதாசன், Er.A.கருப்புராஜ் ஆகியோர் இணைந்து பாராட்டுச் சான்றிதழும், பரிசுகளும் வழங்கி கௌரவித்தார்கள்.

**உலக மனநல நாள்**
அக்டோபர் 10. 2016

THEME




## பிறந்தநாள் கொண்டாட்டம்

நவம்பர் 14. 2016



மதுரை, கல்யாணி அஸோசியேட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.முரளிகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய பிறந்தநாளன்று தனது குடும்பத்தோடு சேர்ந்து வந்து நமது பள்ளி மாணவர்களுக்கு கேக் கொடுத்து சிறப்பாக கொண்டாடினார்கள்.

## கிறிஸ்துமஸ் விழா

டிசம்பர் 23. 2016




நமது பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் சிறப்பு விருந்தினராக மதுரை மாநகராட்சி நகர பொறியாளர் Er.A.மதுரம், அவர்கள் குடும்பத்தோடு கலந்து கொண்டு மாணவர்களுக்கு இனிப்பும், பரிசுகளும் வழங்கினார்கள். இறை செய்தியை Er.ஜெயபிரகாஷ் , அவர்கள் அருளினார்கள்.

## மலையேற்றப் பயிற்சி

மார்ச் 10,11, 2016



நமது பள்ளி மாணவர்களுக்கு கொடைக்கானல் மலைப் பகுதிகளில் இரண்டு நாட்கள் மலையேற்றப் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் புதிய காலசூழ்நிலையையும், உயரமான மற்றும் பள்ளமான நிலப்பரப்புகளைப் பற்றியும், மலைப்பகுதிகளில் காணப்படும் இயற்கை வளங்களையும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகள் பற்றியும் அறிந்து கொண்டார்கள். இது மாணவர்களுக்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும், உடல் ஆரோக்கியத்தையும் தந்தது.

## பெற்றோர் ஆலோசனை

அக்டோபர் 10. 2016



நமது பள்ளியில் சிறப்பு பயிற்சி முடித்து தனியார் நிறுவனங்களில் வேலை செய்து வரும் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கென்று ஆலோசனைகள் மற்றும் தொடர் உதவிகளை நமது பள்ளியும் லேடிடோக் கல்லூரியின் சமூக அறிவியல் துறையும் இணைந்து நடத்தி வருகிறது.